# சிங்களம் மட்டும்தான் என்ற கொள்கையுடன் எமது நாட்டினால் முன்னோக்கி நகரமுடியாது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



இலவசக் கல்வியை நவீனத்துவப்படுத்தி, பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகாத மாணவர்களுக்கும் உயர்தரக் கல்விக்கான தெரிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், என நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு - செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தின்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எமது நாட்டின் கல்வித்துறை புரட்சிகரமான மாற்றத்தை நோக்கி பயணிக்க வேண்டும். 50 களில் இருந்த சிங்களம் மட்டும்தான் என்ற கொள்கையுடன், எம்மால் நாடு என்ற ரீதியில் தற்போது முன்னோக்கி நகர முடியாது.

எல்லைகளை வகுத்துக் கொண்டு பயணிக்கும் பயணத்தினால் நாட்டுக்கு சௌபாக்கியமான எதிர்காலம் கிடைக்காது. சிங்கள மொழியுடன் ஏனைய மொழிகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். விசேடமாக ஆங்கில மொழி மூலமான கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் உள்ளோம்.

க.பொ.த. சாதாரணத் தரப்பரீட்சைக்குப் பின்னர் அல்லது அதற்கு முன்னர் பாடசாலைகளை விட்டு வெளியேறும் மாணவர்கள் தொழிற் கல்வியை எதிர்பார்க்கிறார்கள். ஆயினனினும், தொழிநுட்பக் கல்வி முறைமையானது நாட்டில் வீழ்ச்சியடைந்துள்ளது.

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 19 செவ்வாய்க்கிழமை 05.12.2023 கதிர் 127

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

# 10 ஆம் தரத்தில் சாதாரணதரப் பரீட்சை 12 இல் உயர்தரப் பரீட்சை நடைபெறும்!

## உத்தேச புதிய கல்வி மறுசீரமைப்பு வெளியீடு

பாடசாலைத் தரங்களின் எண்ணிக்கையை 13 இல் இருந்து 12 ஆகக் குறைப்பதற்கு முன்மொழியப்பட்டிருப்பதாக உத்தேச புதிய கல்வி மறுசீரமைப்பை வெளியிட்டு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் சபை முதல்வரான கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் அண்மையில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 2023 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் முன்னேற்றங்கள் மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, உத்தேச புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மூலம்,

2 ➤

# முப்படைகளே போதைப்பொருள் பாவனையை வடக்கு கிழக்கில் திட்டமிட்டு ஊக்குவிக்கின்றன!

## கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு



வடக்கு கிழக்கில் முப்படைகள் ஊடாகவே திட்டமிட்ட வகையில் போதைப் பொருள் பாவனை ஊக்குவிக்கப்படுவதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல்கள்

2 ➤

# ரணிலின் 10 பேர்ச் வீட்டுக்காணித் திட்டம் அவிசாவளையில் ஆரம்பிக்கப்படவேண்டும்

## மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்து!





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெருந்தோட்ட மக்களுக்கான பத்து (10) பேர்ச் வீடமைப்பு காணி திட்டம் முதலில் எனது கொழும்பு மாவட்ட அவிசாவளை தொகுதி பென்ரித் தோட்டம் கருங்காளி பிரிவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என கோருகிறேன், என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இங்கே இடம்பெற்றுள்ள தீவிபத்தில் எட்டு வீடுகள் பெரும் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. இன்னமும் நான்கு வீடுகள் சிறு சேதங்களுக்கு உள்ளாகி உள்ளன. இங்கே ஏறக்குறைய

2 ➤

# சிறுபான்மை உரிமை ஆணைக்குழு இலங்கையில் நிறுவப்பட வேண்டும்!

## ஐ.நா. அமர்வில் கலாநிதி சிவப்பிரகாசம்

(வி.ரி.சகாதேவராஜா)



சிறுபான்மை உரிமைகள் ஆணைக் குழுவொன்று இலங்கையில் நிறுவப்பட வேண்டும், என்று சிறுபான்மையினர் பிரச்சினைகளுக்கான ஐக்கியநாடுகள் மன்றத்தின் 16 ஆவது அமர்வில் உரையாற்றிய பிரபல மனித உரிமைகள் செயற்பாட்டாளரும் மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்று பணிப்பாளருமான கலாநிதி. பி.பி. சிவப்பிரகாசம் முன்மொழிவை சமர்ப்பித்துரையாற்றினார்.

சிறுபான்மையினர் பிரச்சினைகளுக்கான ஐக்கியநாடுகள்

2 ➤

# சந்ததியை பழுதாக்கும் மதுபானசாலையை அனுமதிக்க முடியாது பொத்துவில் மதுபானசாலைக்கு எதிராக ஹரீஸ் எம்.பி சாட்சியம்!



(நூருல் ஹுதா உமர்)

பொத்துவில் நகரில் மதுபான விற்பனை நிலையம் திறக்கப்படுவதை தான் வன்மையாக எதிர்ப்பதாகவும், குறித்த மதுபானசாலை அமையவுள்ள இடத்திலிந்து 200 மீற்றருக்குட்பட்ட பிரதேசத்தில் பொத்துவில் தமிழ் மகா வித்தியாலயம் அமைந்துள்ளதாகவும் அதேபோன்று 200 மீட்டருக்குட்பட்ட இடைவெளியில் பௌத்த விகாரை, கோயில், தேவாலயம், பொத்துவில் ஜ/ம்மா பள்ளிவாசல், வைத்தியசாலை, நீதிமன்றம், பொலிஸ் நிலையம், பாலர் பாடசாலை என்பன அமைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டிய திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸ் எதிர்கால சந்ததியை பழுதாக்கும் இந்த மதுபானசாலையை அனுமதிக்க முடியாது, என்று தனது பக்க விளக்கமளிப்பில் சுட்டிக்காட்டியிருந்தார்.

பொத்துவில் நகரில் மதுபானசாலை அமைப்பது சம்பந்தமாக கோரப்பட்ட அனுமதியை ரத்து செய்யுமாறு கோரி திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் முறைப்பாடு செய்திருந்தார். இது தொடர்பிலான விசாரணை இன்று பொத்துவில் பிரதேச செயலகத்தில் ஹலால், மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர், திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்,

2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# டுபாயிலிருந்து வந்தார் ரணில்

டுபாயில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் பங்கேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று இரவு நாடு திரும்பினார்.

இந்த மாநாட்டில், இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான கூட்டுத் திட்டமாக ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகத்துக்கான திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்தார்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் காலநிலை மாற்றம் தொடர்பான விசேட பிரதிநிதி ஜோன் கெரிக்கும் இடையிலான சந்திப்பு இந்த மாநாட்டின் போது இடம்பெற்றது. இதேவேளை, மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் நிறுவனர் பில் கேட்ஸுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## சந்ததியை பழுதாக்கும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச செயலக அதிகாரிகள் முன்னிலையில் இடம் பெற்றது.

இந்த சாட்சியமளிக்கும் நிகழ்வில் மேலும் கருத்து வெளியிட்ட அவர், பொத்துவில் பிரதேசம் சுற்றுலாத் துறைக்கு பேர் போன இடமென்பதால் அருகம்பே பிரதேசத்தில் ஐந்துக்கு மேற்பட்ட மதுபானசாலைகள் இயங்கிக்கொண்டிருப்பதனால் இந்த மதுபான சாலைக்கு உரிமம் வழங்குவது அவசியமற்றது என்பதனால் பொத்துவில் பிரதேச சிவில் அமைப்புக்களும், பொது மக்களும் என்னிடம் இந்த அனுமதி வழங்களை ரத்து செய்து தருமாறு கேட்டுக்கொண்டிருப்பதனால் அவர்களின் பிரதிநியாக இருக்கும் நான் இந்த அனுமதியை எக்காரணம் கொண்டும் வழங்க கூடாது என்பதிலும், உரிமம் வழங்குவதனூடாக எதிர்காலத்தில் வரவிருக்கும் சமூக சீர்கேட்டை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாதென்பதிலும் உறுதியாக இருப்பதாக தனது சாட்சியத்தில் விளக்கியிருந்தார்.

சுகயீனம் காரணமாக நேரடியாக சமூகமளிக்க முடியாத சூழ்நிலையில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் நிகழ்நிலை ஸூம் தொழிநுட்பத்தினூடாக தோன்றி இங்கு விளக்கமளித்தார். இந்த சாட்சியமளிக்கும் நிகழ்வில் மதகுருமார்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி, நிதி இராஜாங்க அமைச்சர் மற்றும் அரச உயர்மட்டங்களின் கவனத்திற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கொண்டு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறுபான்மை உரிமை ஆணைக்குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தின் 16வது அமர்வு ஜீனிவாவில் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி. பி.பி. சிவப்பிரகாசம்,

நான் கலாநிதி. பி.பி. சிவப்பிரகாசம், இலங்கையில் மனித அபிவிருத்தி தாபனத்தையும், புகுமுனு மற்றும் ஐஆயுனுசு ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன்.

சில நல்ல நடைமுறைகளை ஆரம்பித்து வைத்த இலங்கை அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் அதே வேளையில், இலங்கையில் மலையக பெருந்தோட்ட சமூகத்தின் அபிவிருத்தியில் உள்ள சில முரண்பாடுகள் குறித்தும் நான் கவனம் செலுத்த விரும்புகிறேன்.

காணி மற்றும் வீடு என்பது சமூகம் எதிர்நோக்கும் மிக முக்கியமான பிரச்சினையாகும். ஏறக்குறைய 150 வருடங்களுக்கு முன்னர் ஆங்கிலேயர்களின் காலனித்துவ ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட லயன் அறைகளிலேயே இன்றும் மலையக பெருந்தோட்ட சமூகத்தை சேர்ந்த மக்களில் 67 வீதமானவர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதே உண்மை. மேலும், நிலம் மற்றும் வீட்டு உரிமையும் பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது.

மொழி உரிமையும் பிரச்சினையாக காணப்படுகின்றது. நாட்டின் 13 ஆவது திருத்தச் சட்டம் மொழி உரிமையை உறுதிப்படுத்தினாலும், அரச நிறுவனங்களில் போதியளவு தமிழ் உத்தியோகத்தர்களை நியமிக்கத் தவறியமை, சிறுபான்மையினரின் நிலைமையை பரிதாபத்திற்குரியதாக மாற்றியுள்ளது.

மேலும் தோட்டத்தின் மருத்துவ மற்றும் சுகாதார பிரச்சினைகள். பெருந்தோட்ட சுகாதார சேவைகளை உயர்த்துவது தேசிய மற்றும் சர்வதேச தரநிலைகளுடன் இணைவதற்கான ஒரு கட்டாய நடவடிக்கையாகும். தற்போது, பெருந்தோட்ட மருந்தகங்களில் பெரும்பாலானவை தோட்டக் கம்பனிகளின் மேற்பார்வையின் கீழேயே காணப்படுகின்றது.

இந்த அமைப்பு ஒட்டுமொத்த நாட்டின் சுகாதார கட்டமைப்பிற்கு குறிப்பிடத்தக்க சவால்களை முன்வைக்கிறது. அனைவருக்கும் தரமான சுகாதார சேவைகளைப் பெறுவதன் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பது, பெருந்தோட்ட சமூகத்தின் வாழ்க்கையை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், நாட்டின் வளர்ச்சிக்கும் பங்களிக்கிறது.

எனவே, சிறுபான்மை இன, மத அல்லது மொழி குழுக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக சிறுபான்மை உரிமைகள் ஆணைக்குழுவொன்று இலங்கையில் நிறுவப்பட வேண்டும் என்று நான் முன்மொழிகின்றேன், என்று தெரிவித்துள்ளார்.

## ரணிலின் 10 பேர்ச் வீட்டுக்காணித் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருபது குடும்பங்கள் வாழ்வதாக அறிகிறேன். இந்த இருபது குடும்பங்களுக்கும் வீடுகளை கட்டிக்கொள்ள தலா பத்து (10) பேர்ச் காணி துண்டுகள் வழங்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது பட்ஜெட் உரையில் பெருந்தோட்ட குடும்பங்களுக்கு வீடமைக்க காணி வழங்குவேன் எனக்கூறி, அதற்காக நானூறு கோடி ரூபாயை தனது அமைச்சின் நேரடி கண்காணிப்பில் ஒதுக்கிக்கொண்டுள்ளார்.

ஆகவே எனது இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தனது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

கொழும்பு மாவட்ட அவிசாவளை தொகுதி பென்ரித் தோட்டம் கருங்காளி பிரிவில் ஏற்பட்டுள்ள தீவிபத்தின் சேதங்களை பார்வையிட சென்ற கொழும்பு மாவட்ட எம்பி மனோ கணேசன், ஸ்தலத்தில் இருந்தபடி ஊடகங்களுக்கு கூறியதாவது,

இங்கே அனைவரும் இந்த தோட்டத்தில் பணி புரிபவர்கள் அல்ல. வெளியில் மாற்று தொழில் செய்பவர்களும் இங்கே இருக்கிறார்கள்.

ஆனால், அனைவரும் இங்கேதான் பரம்பரை பரம்பரையாக நீண்ட காலம் வாழ்பவர்கள். ஆகவே தலா பத்து (10) பேர்ச் காணி துண்டுகள் அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

சொந்தமாக வருமானம் உள்ளவர்கள் அரசாங்கம் தரும் காணியில் வீடு கட்டிக்கொள்ள வேண்டும். இயலாதவர்களுக்கு அராசங்கம், இலங்கை, இந்திய வீடமைப்பு திட்டங்களின் கீழ் வீடு கட்டிக்கொடுக்க வேண்டும். இதுதான் நிரந்தர தீர்வு. இதுதான் எனது கோரிக்கை.

தற்சமயம் தற்காலிக தீர்வாக, தோட்ட நிறுவன முகாமையாளர் ஹெட்டியாராச்சி உடன் பேசி உள்ளேன். தீக்கிரையான வீடுகளின் சேதங்களை திருத்தி தர அவர் உடன்பாடு தெரிவித்து பணியை ஆரம்பித்துள்ளார். கொழும்பு மாவட்ட செயலாளர் கே.ஜி. விஜயசிறியிடம் இதோ இங்கிருந்தபடியே நான் தொலைபேசியில் உரையாடினேன். அரச தரப்பு நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார். அவிசாவளை பிரதேச செயலாளர் தில்ஹானியிடமும் உரையாடி உள்ளேன்.

உடைமைகளை இழந்த மக்களுக்கு எனது சார்பில் நிதி வழங்கி உணவு மற்றும் சமையல் பாத்திரங்கள், பாடசாலை உபகரணங்கள் ஆகியவற்றை, அவிசாவளை நகரசபை உறுப்பினர் சுனில் செய்கிறார். பிரதேசபை உறுப்பினர் சந்திரகுமார் மற்றும் அவிசாவளை நகர, பிரதேச வலய அமைப்பாளர்கள் உதவிடுகிறார்கள். இது தொடர்பில் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் மேஜர் பிரதீப் உதுகொட எம்பியிடமும் நான் அறிவித்துள்ளேன். பத்து (10) பேர்ச் காணி துண்டுகள் வழங்கள் தொடர்பில் அடுத்த வார கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் உரையாடி முடிவெடுக்க தீர்மானித்துள்ளேன், என்றார்.

## முப்படைகளே போதைப்பொருள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சுக்கள் மீதான விவாதத்தின் போது கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கைப் பொறுத்த வரையில் வழிகாட்டலும் ஆலோசனையும் என்பது மிக முக்கியமானவை. வடக்கு கிழக்கில் போதைக்கு அடிமையாதல் என்பது, மிகப் பெரும் பிரச்சனையாக உருவாகிவருகின்றது. ஏனென்றால் – சிறிலங்கா அரசானது இன்னும் ஆயுதக் கிளர்ச்சியை தோற்கடிக்கும் மனோநிலையில்தான் ஓடிக்கொண்டிருக்கிறது.

இதனால் முப்படைகள் ஊடாகவே இந்த போதைப் பொருள் பாவனை ஊக்குவிக்கப்படுகின்றது.

அரசாங்கம் மற்றும் இராணுவத்தினரது முழு ஒத்துழைப்புடனேயே இவை நடைபெறுகின்றன. இராணுவந்தான் நேரடியாகவே அந்தச் செயற்பாட்டைச் செய்து வருகின்றது. இப்படியான ஒரு சூழலில், வடக்கு கிழக்கில் மிகப் பெரும் அளவிலான இளைஞர்கள் போதைவஸ்துக்கு அடிமையாக்கப்பட்டு மோசமான நிலமைக்குத் தள்ளப் படுகின்றார்கள்.

எனவே, பாடசாலைகளில் உளவளச் செயற்பாடுகள் மிக முக்கியமானதாகும். பாதிக்கப்படுபவர்களை ஏதோ ஒரு வழியில் அதிலிருந்து மீட்க வேண்டுமாயின் இத்தகைய உளவளச் செயற்பாடுகள் முக்கியமானதாக இருக்க வேண்டும்.

மாணவர்கள் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்குரிய மனோநிலையை உருவாக்கி, அவர்களை நற்பிரசைகளாக்குவதை விடுத்து, மாறாக அவர்களைக் குற்றவாளிகளாக்கி சமூகத்திலிருந்து ஒதுக்கும் நிலைமையே உருவாகியிருக்கிறது, எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (04)

## 10 ஆம் தரத்தில் சாதாரணதரப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு பிள்ளையும், 17 ஆண்டுகளில் பாடசாலைப் படிப்பை முடிக்க வாய்ப்பு வழங்கப்படும் என கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

4 வயதில் முன்பள்ளியும், ஆரம்பப் பிரிவு 1 முதல் 5 ஆம் தரம் வரையிலும், கனிஷ்ட பிரிவு தரம் 6 முதல் தரம் 8 வரையிலும், சிரேஷ்ட பிரிவு தரம் 9 முதல் தரம் 12 வரையிலும் வகைப்படுத்தப்பட்டு இருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேநேரம், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை இலகுவாக்கி, போட்டியை நீக்குவதற்கும் கல்வி அமைச்சு யோசனையை முன்மொழிந்துள்ளது.

அத்தோடு, உத்தேச புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மூலம், 10ஆம் ஆண்டில் சாதாரணதரப் பரீட்சையையும், 12ஆம் தரத்தில் உயர்தரப் பரீட்சையையும் நடத்த கல்வி அமைச்சு முன்மொழிந்துள்ளது.

இதற்கிடையில், சாதாரணதரப் பரீட்சைக்கான பாடங்களின் எண்ணிக்கையை 9 இல் இருந்து 7 ஆகக் குறைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் கல்வி அமைச்சுக்கு 517.05 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில், பாடசாலைப் பாடப்புத்தகங்கள் வழங்குவதற்காக இரண்டாயிரம் மில்லியன் ரூபாவும், பாடசாலைச் சீருடைக்காக 6 மில்லியன் ரூபாவும், 7 இலட்சத்து 28 ஆயிரத்து 480 பாடசாலை மாணவர்களுக்குக் காலணிகளை வழங்குவதற்கு 2,500 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

சுமார் 1.07 மில்லியன் பாடசாலை மாணவர்களுக்குத் தற்போது மதிய உணவு வழங்கப்படுவதாகவும், 2024 ஆம் ஆண்டில் 1.5 மில்லியன் மாணவர்களுக்கு உணவை வழங்கத் தயாராக இருப்பதாகவும் கல்வி அமைச்சின் அதிகாரிகள் இதன்போது தெரிவித்துள்ளனர். (04)

## சிங்களம் மட்டும்தான் என்ற .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி, அதில் 15-20 வீதமானவர்கள் மட்டும்தான் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுகிறார்கள். ஏனையோரில் 7-8 வீதமானவர்கள் தனியார் பல்கலைக்கழகங்களில் சேர்கிறார்கள். எஞ்சியுள்ள 70 வீதமான மாணவர்களுக்கு பட்டப்படிப்பைத் தொடர முடியாத நிலைமையே காணப்படுகிறது.

இதனை நிவர்த்தி செய்ய வேண்டுமெனில், நாம் இலவசக் கல்வியை நவீனத்துவப்படுத்த வேண்டும்.

இதன் ஊடாக பல்கலைக்கழகத்திற்குள் செல்ல முடியாத 70 வீதமானோருக்கு உயர்கல்வியைத் தொடர்வதற்கான தெரிவை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். (04)

**விற்பனையாளர் தேவை**

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# ஆதிவாசிகளின் கல்விப் பிரச்சினைக்கு செந்தில் தொண்டமான் உடனடித் தீர்வு



(ஹஸ்பர்)

மட்டக்களப்பு வாகரை ஆதிவாசிகள் கிராமத்திற்கு விஜயம் செய்த கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் ஆதிவாசிகளின் பிரச்சினைகளை கேட்டறிந்தார்.

வாகரையில் உள்ள ஆதிவாசிகள் தங்களுடைய கிராமத்தில் பல வருட காலமாக பல்வேறுபட்ட பிரச்சினைகள் இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

தங்களுடைய கிராமத்தில் உள்ள பாடசாலைகளில் கணித, விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது. ஆதலால், மாணவர்கள் பெரும் சிரமத்திற்கு தள்ளப்படுகின்றனர் எனவும், கிராமத்திற்கான பாதைகள் கடும் மோசமான நிலையில் உள்ளதாகவும், வைத்தியசாலைக்கு உதவியாளர்களை நியமித்து தருமாறும் ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தனர்.

ஆதிவாசிகளின் கோரிக்கையின் பிரகாரம் 24 மணித்தியாலத்தில் மாகாண கல்வி அமைச்சின் ஊடாக 2 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதுடன், பாதை புனரமைப்பதற்கான நடவடிக்கையும், வைத்திய சாலைக்கு உதவியாளர் நியமிப்பதற்கும் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆளுநரால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

# பாரம்பரிய உணவுகள் மூலம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும் விழிப்புணர்வு நிகழ்வு





(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச செயலகத்திண் பாரம்பரிய உணவுகள் மூலம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குதல் என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று திங்கட்கிழமை இறக்காமம் கமு.சது. அமீர்-அலிபுரம் வித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சுகாதார அமைச்சின் சுதேச வைத்திய பிரிவின் கீழ் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். றிஜாஸ் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் “குரக்கன் கஞ்சி தயாரித்தல் மற்றும் அதனால் கிடைக்கின்ற நன்மைகள்” தொடர்பாக இறக்காமம் ஆயுர்வேத வைத்தியசாலை வைத்தியர் டாக்டர் கே. எல். எம். நக்பரினால் சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

மேலும், இந் நிகழ்விற்கு இறக்காமம் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே. எல்.ஹம்சார் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்து ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குதல் தொடர்பாக விளக்கங்களையும் தெளிவுபடுத்தி இருந்தார்.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக அப்பாடசாலையின் அதிபர் எஸ்.எம். லாஹிர் கலந்து சிறப்பித்ததுடன் மேலும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கல்முனை மாநகர சபை உத்தியோகத்தர்களின் புலமையில் சித்திபெற்ற பிள்ளைகளுக்கு பாராட்டு

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் நிதிப் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களான ஏ.எம்.எம். றியாஜத் மற்றும் எம்.எஸ்.நஜீம் ஆகியோரின் பிள்ளைகள் இம்முறை தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக அவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

கல்முனை மாநகர சபை நிதிப் பிரிவின் ஏற்பாட்டில் கணக்காளர் கே.எம்.றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச். ஜௌஸி ஆகியோரும் அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

இதன்போது முஹம்மட் றியாஜத் அறைஸ் அம்ஹர் மற்றும் நஜீம் முஹம்மட் நுபையில் நகீ ஆகியோர் நினைவுச் சின்னம், பரிசுப் பொதி மற்றும் பணப் பரிசு என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதில் மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், நிர்வாகப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வர வர்மண், நிதிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.ஏ.பாஸித், நிதி உதவியாளர் திருமதி எஸ். யோகராஜா, சுகாதாரப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம். இஸ்ஹாக் உட்பட நிதிப் பிரிவு உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

எதிர்காலத்தில் கல்வித்துறை சாதனைகளுக்காக மாநகர சபையின் அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த உத்தியோகத்தர்களின் பிள்ளைகளை பொதுவான விழாவொன்றில் பாராட்டி கௌரவிப்பதற்கு நடவடிக்கை



எடுக்கப்படும் என்று மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி இதன்போது தெரிவித்தார்.



# சென்னையில் வெள்ளத்தின் தாக்கம் இந்த முறை பெருமளவு குறைவாகும்!

## தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்



கடந்த காலத்தோடு ஒப்பிடுகையில் சென்னையில் வெள்ளத்தின் தாக்கம் இந்த முறை பெருமளவு குறைந்திருக்கிறது, என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை ரிப்பன் மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள மழை, வெள்ளம் உள்ளிட்ட பாதிப்புகளுக்கான கட்டுப்பாட்டு அறையை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசியபோது, சென்னையில் வரலாறு காணாத வகையில் பெருமழை கொட்டித் தீர்த்துள்ளது. பல இடங்களில் தண்ணீர் தேங்கியது. 2021ஆம் ஆண்டு நவம்பரில் பெருமழை பெய்தது. அப்போது தேங்கிய மழைநீரை கணக்கில் கொண்டு கட்டமைப்புகளை மேம்படுத்த திட்டமிட்டோம். அதற்கான பல்வேறு முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டது. இதற்காக சுமார் ரூபா.4000 கோடி மதிப்புள்ள வெள்ளநீர் வடிகால் பணிகளை மேற்கொண்டோம். அதனால்தான் கடந்த காலத்தோடு ஒப்பிடுகையில் வெள்ளத்தின் தாக்கம் பெருமளவு குறைந்திருக்கிறது.

உதாரணமாக, 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தை நாம் மறந்திருக்க முடியாது. அப்போது மீனம்பாக்கத்தில் பெய்த மழை 34 செமீ. ஆனால் இப்போது மீனம்பாக்கத்தில் 36 மணி நேரத்தில் 43 செமீ மழை பெய்துள்ளது. இது மிக மிக அதிகமாகும். நாம் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் நிவாரணப் பணிகள் காரணமாக உயிரிழப்புகள் பெருமளவு குறைக்கப்பட்டன. சொல்லப் போனால், 2015இல் ஏற்பட்ட வெள்ளத்தில் 199 பேர் உயிரிழந்தனர். ஆனால், இன்று அதைவிட அதிக மழை பெய்த போதிலும் 7 பேர் மட்டுமே உயிரிழந்துள்ளனர்.

தற்போது 9 மாவட்டங்களில் 61,666 நிவாரண முகாம்களில் மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அங்கு பால், உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளம் என்பது செம்பரம்பாக்கத்திலிருந்து திட்டமிடப்படாமல் திடீரென தண்ணீர் திறந்துவிடப்பட்டதால் ஏற்பட்டது. அது ஒரு செயற்கை வெள்ளம். இது இயற்கை வெள்ளம். ஆனால், இந்த அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திட்டமிடலுடன் முன்கூட்டியே திறந்துவிட்டதால் இந்த பெருமழையை சமாளித்திருக்கிறோம்.

நேற்று மழை நிற்பதற்கு முன்பே தமிழகத்தின் அனைத்து மாநகராட்சியிலிருந்தும் தூய்மைப் பணியாளர்கள் சென்னை வந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் சென்னை தூய்மை பணியாளர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறார்கள். பல பகுதிகளில் இயல்புநிலை மீண்டும் தொடங்கியிருக்கிறது. 14 அமைச்சர்கள் களத்தில் பணியாற்றி வருகிறார்கள்.

ரூபா.4000 கோடிக்கு பணிகள் செய்தும் சென்னை மிதக்கிறது என எதிர்கட்சி தலைவர் ஒரு மிகப்பெரிய குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இதனை நான் அரசியலாக்க விரும்பவில்லை. ஆனாலும் அந்த ரூபா. 4000 கோடிக்கு பணி செய்த காரணத்தினால்தான் 47 ஆண்டுகள் இல்லாத மழை பெய்தும் சென்னை தப்பித்திருக்கிறது. அவர்கள் ஆட்சிகாலத்தில் இதையெல்லாம் செய்யவில்லை.

வரலாறு காணாத மழையின் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, குடியிருப்புகள் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ரூபா.5000 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டி மத்திய அரசுக்கு இன்று கடிதம் எழுத இருக்கிறோம். நாடாளுமன்றத்தில் திமுக உறுப்பினர்களும் இதைப் பேச இருக்கிறார்கள், என்று தெரிவித்தார். (04)

## புயல் பாதிப்பு மீட்புக்கு 5,000 கோடி ரூபாவை வழங்க வேண்டும் இந்திய மத்திய அரசிடம் திமுக எம்.பி திருச்சி சிவா கோரிக்கை



மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட தமிழகத்துக்கு இந்திய மத்திய அரசு உடனடியாக 5,000 கோடி ரூபாவை வழங்க வேண்டும் என்று மாநிலங்களவையில் திமுக எம்.பி. திருச்சி சிவா வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இடைவிடாது கொட்டி தீர்த்த கனமழையால் பெரும்பாலான பகுதிகளில் தண்ணீர் தேங்கி குளம்போல காட்சியளிக்கிறது. இதனால் பொதுமக்களின் இயல்புவாழ்க்கை முற்றிலுமாக முடங்கியது.

இந்த நிலையில், முன்னதாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், 'மிக்ஜாம்' புயல் மீட்பு பணிகளுக்காக ரூபா.5,000 கோடி நிவாரண நிதி வழங்கக் கோரி இந்திய மத்திய அரசுக்கு கடிதம் எழுத உள்ளதாகவும், இதுகுறித்து மாநிலங்களவையில் எம்.பி.கள் கேள்வி எழுப்புவார்கள் என்றும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், திமுக எம்.பி. திருச்சி சிவா இது குறித்து மாநிலங்களவையில் பேசியதாவது," சென்னையில் ஏற்பட்டுள்ள கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக சாலைகள் முற்றிலுமாக அடித்துச் செல்லப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கு அத்தியாவசிய சேவைகளைக் கூட வழங்க முடியாத சூழல் இருக்கிறது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஒட்டுமொத்த அமைச்சரவையும், மாநகராட்சி அதிகாரிகள், தீயணைப்புத் துறையினர், துப்புரவுப் பணியாளர்கள், மருத்துவர்கள், மீட்புக் குழுவினர், மின்சாரத் துறையினர் மக்களை மீட்கவும், நிவாரணப் பொருட்களை வழங்கவும் போர்க்கால அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. தமிழகம் மற்றும் 5 மாவட்டங்களின் நிலையைக் கருத்தில் கொண்டு, ஆரம்பக் இடைக்கால நிவாரண நிதியாக ரூபா.5,000 கோடி வழங்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துகிறேன், எனத் தெரிவித்துள்ளார். (04)

## பனிப்புயவால் முடங்கியது ஜெர்மனி போக்குவரத்துகள் அனைத்தும் ரத்து!



ஜெர்மனியின் முனிச் நகரில் தொடர்ந்து வீசிவரும் பனிப்புயல் காரணமாக, அனைத்து போக்குவரத்துகளும் ரத்துச் செய்யப்பட்டு நகரமே ஒட்டுமொத்தமாக முடங்கியிருக்கிறது.

முனிச் விமான நிலையத்தில் அனைத்து விமானங்களும் ரத்து செய்யப்பட்டு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. முனிச் நகரில் சனிக்கிழமை பிற்பகலுக்குப் பிறகு பேருந்து மற்றும் டிராம் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டதாகவும், ரயில் தண்டவாளங்கள் மற்றும் சுரங்கப்பாதைகளும் பனிப்படலத்தால் மூடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

தெற்கு ஜெர்மனியின் பெரும்பாலான பகுதிகளில் பனிப்புயல் வீசி வருவதால் முனிச் விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்து முற்றிலும் நிறுத்தப்பட்டுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல விமானங்களின் புறப்பாடு மற்றும் தரையிறங்குவதும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

சாலைகளில் பனி தேங்கியுள்ளதன் காரணமாக பல இடங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் சாலை விபத்துக்களும் நிகழ்ந்துள்ளன.

முனிச் மற்றும் உல்ம் நகரங்களில் ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. தண்டவாளங்களில் தேங்கியுள்ள பனியால் ரயில்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டதால், தொலைதூரம் செல்லும் பயணிகள் ஒரு இரவு முழுவதும் ரயிலிலேயே காத்திருக்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டனர்.

ஜெர்மனி மட்டுமன்றி அதன் அண்டை நாடுகளான ஒஸ்திரியா மற்றும் சுவிட்சர்லாந்திலும் பனிப்புயல் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன்காரணமாக, அங்கு பனிச்சரிவு ஏற்படலாம் என்று அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். மேற்கு ஒஸ்திரியாவில் ஒரே இரவில், 50 செ.மீ அளவுக்கு பனி பெய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மோசமான வானிலையால் சுவிட்சர்லாந்தின் சுரிச் நகரிலும் விமான சேவை முடங்கியுள்ளது.

பனிப்புயல் காரணமாக சாலைகளில் விழுந்த மரங்களால் ஆயிரக்கணக்கானோர் மின்சாரம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர். பனி மற்றும் அது தொடர்பாக 350 விபத்துகள் நேரிட்டதாக மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர். இதில் சிலருக்கு லேசானது முதல் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன.

பனிப்புயல் காரணமாக பனிமண்டலங்கள் ஏற்பட்டு, பிறகு அது நிலச்சரிவாக மாறும் அபாயம் இருப்பதாகவும் அஞ்சப்படுகிறது.

செக் குடியரசு நாட்டிலும், சாலைப் போக்குவரத்து முடக்கப்பட்டு ரயில் மற்றும் பொதுப் போக்குவரத்துகள் சிலது ரத்து மற்றும் சிலது தாமதமாக இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதிவேக ரயில்களும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. (04)

# உலக மண் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் சிரமதானம்





உலகம் முழுவதும் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 5ஆம் திகதி “உலக மண் தினம்” கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில், உலக மண் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி நகர் பகுதியில் சிரமதான நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகம், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களம், கரைச்சி பிரதேச சபை ஆகியன இணைந்து கிளிநொச்சி நகரின் பிரதான வீதியோரங்களிலுள்ள பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றும் பணியினை முன்னெடுத்திருந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரனின் தலைமையில் குறித்த சிரமதான நிகழ்வு நடைபெற்றது.

இதனூடாக கரைச்சி பிரதேச சபை முன்றலில் இருந்து கிளிநொச்சி டிப்போ சந்தியின் ஏ 9 வீதியின் இரு பக்கங்களும் தூய்மையாக்கப்பட்டன.

இதன்போது குறித்த பகுதிகளில் காணப்பட்ட பெருமளவான பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் பாதீனியச் செடிகள் அகற்றப்பட்டன.

பூமியில் மண்ணின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மக்கள் தொகை விரிவாக்கம் காரணமாக வளர்ந்து வரும் பிரச்சினையை முன்னிலைப்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 5ஆம் திகதி உலக மண் தினம் அனுசரிக்கப்படுகிறது.

உலக மண் தினத்தை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலும் மண் பாதுகாப்பு விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (02)

## யாழ் பல்கலை விளையாட்டு விஞ்ஞான அலகின் வெள்ளிவிழா உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி



சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனானது

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான (19 வயது) உதைபந்தாட்டப்போட்டியின் இறுதியாட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் சென் பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து சென் ஹென்றீஸ் கல்லூரி மோதியது.

பரபரப்பாக நடைபெற்ற இறுதியாட்டத்தில் இரு அணிகளும் குறிப்பிட்ட நேரத்தில் கோல்கள் பெறும் சந்தர்பங்களை தவறவிட ஆட்டம் 0 - 0 என்ற அடிப்படையில் சமநிலையில் முடிந்தது.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பில் (பெனால்ட்டி) சென் பற்றிக்ஸ் கல்லூரி 4- 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் வெள்ளி விழா சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இத் தொடரின் முதலாவது லீக் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியை 2 - 1 என்ற கோல் கணக்கிலும், இரண்டாவது போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை 1 - 0 என்ற கோல் கணக்கிலும், காலிறுதி ஆட்டத்தில் வேலணை மத்திய கல்லூரியை 1 - 0 என்ற கோல் கணக்கிலும், அரையிறுதி ஆட்டத்தில் அச்சுவேலி தேவரையாளி இந்துக் கல்லூரியை 3 - 0 என்ற கோல் அடிப்படையிலும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## தம்பலகாமம் கால்நடை வளர்ப்பாளருடன் பிரதேச செயலாளர் தலைமையில் சந்திப்பு



(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள பண்ணையாளர்களுடனான கலந்துரையாடல் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி,மேலதிக அரசாங்க அதிபர் ஜெ.எஸ். அருள்ராஜ், மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன்(காணி), வனஜீவராசி திணைக்கள அதிகாரிகள் ,கால் நடை வைத்திய அதிகாரி என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கால் நடை வளர்ப்பாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் தங்களது கோரிக்கைகளை கால் நடை வளர்ப்பாளர்கள் மாவட்ட செயலாளரிடம் முன்வைத்தனர். இதன் போது தம்பலகாமம் பகுதியில் முதலைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த நபரின் குடும்பத்திற்கு முதற் கட்டமாக ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை மாவட்ட செயலாளரினால் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் தம்பலகாமம் பகுதியை சேர்ந்த பண்ணையாளர்களின் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




## முஸ்லிம் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் ஒன்றியம் ஆரம்பம்

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

நாடு முழுவதிலும் உள்ள முஸ்லிம் திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் ஒன்று கூடல் மாத்தளையில் இடம்பெற்றது. இதில் நாடு முழுவதும் பணியாற்றும் முஸ்லிம் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் 45 பேர் கலந்து கொண்டனர்.

நாடு முழுவதும் உள்ள திடீர் மரண விசாரணை அதிகாரிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை உரிய முறையில் கையாள்வதற்கும் முஸ்லிம் ஜனாஸாக்களை துரிதப்படுத்தி குடும்பத்தினரிடம் ஒப்படைத்தல் உள்ளிட்ட இன்னும் பல பணிகளை முன்னெடுக்கும் நோக்கோடு அகில இலங்கை முஸ்லிம் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் ஒன்றியம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

மேற்படி ஒன்றியத்தின் தலைவராக கிண்ணியா பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ் ஷாபி மௌலவியும், செயலாளராக புத்தளம் மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி பி.எம் ஹிஸாமும், பொருளாளராக அக்குரனை பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எல் ரி.ஜே.வசீரும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 13 ஆவது திருத்தச் சட்டம்தான் தீர்வை நோக்கிய ஆரம்பப்படி என்பது நிதர்சனமாகி வருகின்றது

## ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன்



அமிழ்ந்துபோயிருந்த 13 ஆவது திருத்தச் சட்டம் பேசாப் பொருளாகியிருந்த நிலையிலும் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்திலும் அறிக்கைகள் மூலமும் தமிழர்களின் அரசியல் தீர்வுக்கு 13 ஆவது திருத்தச் சட்டம்தான் தீர்வை நோக்கிய ஆரம்பப்படி என தாம் வலியுறுத்திவந்தது நிதர்சனமாகி வருவதாக ஈழ மக்கள் ஜனாயகக் கட்சியின் ஊடக பேச்சாளரும் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்றையதினம் ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்த ஊடக பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் இது தொடரபில் மேலும் கூறுகையில்,

சமீபத்தில் புதுதில்லியில் சில இந்து அமைப்புகள் புலம்பெயர் சிவில் அமைப்பினர், வடக்கு கிழக்கின் சில அரசியல் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடி தமிழ் மக்கள் அரசியல் உரிமைபெற இந்திய இலங்கை ஒப்பந்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா தலையீடு செய்யவேண்டும். என கூட்டாக வலியுறுத்தியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

முன்பதாக கிழக்கு மாகாணம் அரச தரப்பினரால் விடுவிக்கப்பட்டதும் தேர்தல் மூலம் மாகாண அதிகாரத்தை மக்களிடம் வழங்குமாறு நாம் கோரியிருந்தோம். குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் வடக்கு - கிழக்கை சேர்ந்த 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்று நாடாளுமன்றத்தை அலங்கரித்திருந்தாலும் தனி ஒரு நபராக இருந்து அதனை நாம் வலியுறுத்தியிருந்தோம்.

இதேவேளை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டில் இலங்கையின் நிர்வாக அலகு மாவட்ட அலகாகவே இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது. அதன்போது கூட தமிழ் தேசிய கூட்டமைப்பினர் எவ்விதமான கருத்தையும் தெரிவித்திருக்கவில்லை.

ஆனால் எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே குறித்த கருத்து சிறீலாங்கா சுதந்திரக்க கட்சியின் நிலைப்பாடு என்றும் எமது நிலைப்பாடு இலங்கையின் நிர்வாக அலகு மாகாண நிர்வாக அலகாகவே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தார்.

இதேபோன்று வடக்கு மாகாணத்திலும் பேசு பொருளாக இருந்த 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட வெண்டும் என்கின்ற நோக்கில் யார் ஆட்சிக்கு வருகின்றர்கள் என்பது முக்கியமல்ல மாகாண முறைமையை பாதுகாக்க வேண்டும். அது ஜனாநயக ரீதியில் மக்களிடம் ஆட்சி செய்ய வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் வடக்கு மாகாணசபை தேர்தலை நடத்துமாறும் வலியுறுத்தியிருந்தோம்.

தேர்தல் நடத்தப்பட்டு வடக்கு மாகாண சபையின் ஆட்சிக்கு விசேடமாக 5,500 மில்லியன் நிதி மத்திய அரசால் வழங்கப்பட்டது. ஆனால் குறித்த நிதியை ஆட்சி செய்தவர்கள் தமது இயலாமையால் முயையாக மக்களுக்கானதாக கொண்டு சேர்க்கவில்லை என்பதும் வரலாறு.

இதனிடையே மாகாணங்களுக்கு அதிகாரங்களை குறைப்பதற்கு ஜேவிபி, சிஹல உறுமய, ஜாதிக ஹெல உறுமய போன்ற தென்னிலங்கை இனவாதக் கட்சிகள் முயன்றபோதும் தென்னிலங்கையை சேர்ந்த சகோதர மொழி பேசும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் முஸ்லிம் மலையக கட்சிகளை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்புடன் 50 மேற்பட்ட கையொப்பங்களை பெற்று அந்த முயற்சியை தடுத்து நிறுத்தியிருந்தோம்.

நாட்டில் யுத்தம் வலுவாக இருந்த நிலையிலும் நாம் இதனையே வலியுறுத்தியிருந்தோம். ஆனால் இப்போது இவர்கள் காவடி எடுத்துள்ளனர். ஜனாதிபதி அழைத்தும் போகாத இவர்கள் அதனை கிடப்பில் போட்டுவிட்டு பின்னர் ஈஸ்ரர் தாக்குதல் குறுந்தூர் மலை விவகாரம், வெடுக்குநாறி ஆலய விவகாரம் என அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளை காரணம் காட்டி அடிப்படை பிரச்சினையை தீர்க்க முன்வராதிருந்தனர்.

இதனிடையே ஐநா மனித உரிமை பேரவையும் 13 ஆவது வரைபைத்தான் நடைமுறைப் படுத்துமாறு கோருகின்றது. இப்போது இவர்கள் புதுடெல்லிக்கு சென்று இந்திய இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த கோருவது இதயசுத்தியுடன் உண்மையானதாக இருக்குமாயின் அதனை முதலில் நாமே வரவேற்போம்.

13 ஆவது திருத்த சட்டமானது இலங்கையின் அரசியல் யாப்பில் உள்வாங்கப்பட்ட விடயம் என்பதால் இதை நடைமுறைப்படுத்தவதில் தடை ஏதும் இருக்கப்போவதில்லை. ஆனால் புதிதாக ஏதாவதொன்று வருமாயின் அது கடும் வாதப்பிரதிவாதங்கள் மற்றும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என பல பிரச்சினைகளை எதிர்கொண்டு காலதாமதமாக வாய்ப்பிருக்கின்றது

எனவே நாம் நீண்டகாலமாக வலியுறுத்திவரும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் எந்த தடையும் இருக்கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்திருக்கிறார். (01)









## சென்னை விமான நிலையத்தில் மீண்டும் சேவைகள் ஆரம்பம்

சென்னை விமான நிலையத்தில் புறப்பாடு மற்றும் வருகை வழக்கம்போல்நடைபெறுவதாகவும், மழைநீர் தேங்கியதால் மூடப்பட்ட சென்னை விமானத்தில் விமான சேவை மீண்டும் தொடங்யுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பல விமானங்கள் ரத்துச் செய்யப்பட்ட நிலையில், தாங்கள் முன்பதிவு செய்துள்ள விமானங்கள் இயங்குவது குறித்து அந்தந்த நிறுவனங்களிடம் தெரிந்துகொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மோசமான வானிலை தொடர்வதால் தற்காலிகமாக மூடப்படுவதாக சென்னை விமான நிலையம் அறிவித்திருந்தது. விமான நிலைய ஒடுபாதையில் தேங்கி நிற்கும் தண்ணீரை வெளியேற்றும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு, மழைநீரை வெளியேற்றினர்.

இந்த நிலையில், சென்னை விமான நிலையத்தில் மீண்டும் விமான சேவை தொடங்கப்பட்டுள்ளது.

சென்னையில் இருந்து புறப்பட வேண்டிய 89 விமானங்கள், சென்னைக்கு வரவேண்டிய 88 விமானங்கள் என 177 விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. இன்று குறைந்த அளவு விமானங்கள் மட்டுமே இயக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (04)

## யோகப் பயிற்சி என்கிற பெயரில் பாலியல் சுரண்டல் ஆத்மன் என்ற பெயரில் மையங்கள் நடத்தியவர் கைது!



யோகப் பயிற்சி என்கிற பெயரில் பாலியல் சுரண்டலில் ஈடுபட்டு வந்த 71வயதான கிரிகோரியன் பிவோலரு என்பவர் மீதும் மேலும் 14 பேர் மீதும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளது பாரிஸ் நீதிமன்றம்.

கிரிகோரியன் உள்பட 15 பேரில் ஆறு பேரிடம் விசாரணை மேற்கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மீதம் ஒன்பது பேர் விடுவிக்கப்பட்டாலும் நீதிமன்றக் கண்காணிப்பில் அவர்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

பிரான்ஸின் தலைநகரில் மூன்று வெவ்வேறு இடங்களில் 175 காவல் அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில் 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆத்மன் என்கிற பெயரில் பல்வேறு இடங்களில் யோகா பயிற்சி மையங்கள் நடத்தும் அமைப்பு, பயிற்சியில் கலந்து கொள்ளும் பெண்களைப் பாலியல் சுரண்டலுக்கு உள்ளாக்குவதாகக் குற்றச்சாட்டு எழுந்ததைத் தொடர்ந்து பாரிஸ் காவல் துறை சோதனையில் ஈடுபட்டது.

ஆசிரமத்தில் பெண்கள் மூளைச்சலவை செய்யப்பட்டு பாலியல் செயல்களுக்கு வற்புறுத்தப்படுவதும் அவர்கள் மீதான பாலியல் செயல்கள் விடியோவாக்கப்பட்டு அதன் மூலமாக பணம் ஈட்டுகிற குற்றங்களையும் இந்த அமைப்பு செய்து வந்துள்ளமை சோதனையில் கண்டறியப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.12.2023இல் வெளியிடப்பெற்றது.